# முக்கியமான அறிவுரைகள்

# உங்களுடைய கோரலை நிராகரித்த அகதிகள் பாதுகாப்புப் பிரிவின் தீர்மானத்திற்கெதிராக நீங்கள் செய்யும் மேன்முறையீடு சம்பந்தமானது

## *உங்களுடைய மேன்முறையீட்டை தாக்கல் செய்தல் மற்றும் பூரணப்படுத்துதல்*

**அகதிகள் பாதுகாப்புப் பிரிவு அதன் தீர்மானம் குறித்து எழுத்துப்பூர்வமான காரணங்களை உங்களுக்கு தெரிவித்து அந்தக் காரணங்கள் உங்களுக்குக் கிடைத்த 15 நாட்களுக்குள்**

- நீங்கள் எழுத்துப்பூர்வமான ஒரு மேன்முறையீட்டு அறிவிப்பை பூர்த்தி செய்ய வேண்டும். நிரப்பப்படாத ஒரு மேல்முறையீட்டு அறிவிப்பு உங்களுடைய மேன்முறையீட்டுப் பொதியில் காணப்படும்.
- நீங்கள் உங்களுடைய மேன்முறையீட்டு அறிவிப்பின் மூன்று பிரதிகளை அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவின் (RAD/SAR) பதிவகத்திற்கு சமர்ப்பிக்க வேண்டும்.
- உங்களுடன் சேர்ந்து மேன்முறையீடு செய்கின்ற ஒவ்வொரு நபரும் அந்த மேன்முறையீட்டு அறிவிப்பில் பட்டியலிடப்பட வேண்டும் அல்லது தீர்மானத்திற்கெதிராக மேன்முறையீடு செய்கின்ற ஒவ்வொரு நபரும் ஒவ்வொரு மேன்முறையீட்டு அறிவிப்பை அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

**அகதிகள் பாதுகாப்புப் பிரிவு அதன் தீர்மானம் குறித்து எழுத்துப்பூர்வமான காரணங்களை தெரிவித்து அந்தக் காரணங்கள் உங்களுக்குக் கிடைத்த 30 நாட்களுக்குள்**

- நீங்கள் ஒரு மேன்முறையீட்டுப் பதிவேட்டை பூர்த்தி செய்ய வேண்டும்.
- நீங்கள் உங்களது மேன்முறையீட்டுப் பதிவேட்டின் இரண்டு பிரதிகளை அகதிகள் பாதுகாப்புப் பிரிவுக்கு சமர்ப்பிக்க வேண்டும். (RAD)
- மேன்முறையீட்டுப் பதிவுப் படிவத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் *மேன்முறையீட்டாளரின் வழிகாட்டி மற்றும்* கனடா நீதித்துறையின் http://www.irb-cisr.gc.ca/Eng/RefApp/Pages/RefAppKitTro.aspx

என்ற வலைதளத்தில் இருக்கும் *அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவு விதிமுறைகள் ஆகியவற்றில்* கிடைக்கும்.

*தயவுசெய்து கவனிக்கவும்:* **மேன்முறையீட்டை தாக்கல் செய்வதற்கான கால வரையறை கழிந்த பின்னர் நீங்கள் ஒரு மேன்முறையீட்டு அறிவிப்பை செய்தால், உங்களின் மேன்முறையீடு ஏற்றுக்கொள்ளப்படாது.**

## மேன்முறையீட்டு அறிவிப்பையும் மேன்முறையீட்டுப் பதிவேட்டையும் தாக்கல் செய்யவதற்கான காலத்தை நீட்டிப்பதற்கான விண்ணப்பம்

### மேன்முறையீட்டு அறிவிப்பு மற்றும் மேன்முறையீட்டுப் பதிவேடு ஆகிய இரண்டையும் தாக்கல் செய்வதற்கான கால நீட்டிப்பு

உங்களுக்கு உங்களுடைய மேன்முறையீட்டு அறிவிப்பை அல்லது உங்களுடைய மேன்முறையீட்டுப் பதிவேட்டை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாது போயிருந்தால், கால நீட்டிப்புக்காக நீங்கள் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். உங்களுடைய மேன்முறையீட்டு ஆவணங்களைப் தாக்கல் செய்வதற்கு ஏன் கால தாமதமாகியது என்ற காரணங்களை இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். கால நீட்டிப்புக்கான விண்ணப்பம் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவு(RAD) விதிமுறைகளின் 6 ஆம் மற்றும் 37 ஆம் நியதிகளை அனுசரிக்க வேண்டும். உங்களது மேன்முறையீட்டு அறிவிப்பின் மூன்று பிரதிகளையும் உங்களுடைய மேன்முறையீட்டுப் பதிவேட்டின் இரண்டு பிரதிகளையும் நீங்கள் உங்களுடைய விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். உங்களுடைய விண்ணப்பத்திற்கு ஆதரவாக ஒரு உறுதி சான்றை அல்லது சட்டப்பூர்வமான உறுதிமொழியை வழங்க வேண்டும்.

### மேன்முறையீட்டுப் பதிவேட்டை தாக்கல் செய்வதற்கான கால நீட்டிப்பு

உங்களுடைய மேன்முறையீட்டு அறிவிப்பை உரிய நேரத்தில் தாக்கல் செய்து, உங்களுக்கு மேன்முறையீட்டுப் பதிவேட்டை உரிய நேரத்தில் தாக்கல் செய்ய இயலாது போயிருந்தால், கால நீட்டிப்புக்காக நீங்கள் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு (RAD) ஒரு விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். உங்களுடைய மேன்முறையீட்டு ஆவணங்களை தாக்கல் செய்வதற்கு ஏன் தாமதமானது என்ற காரணங்களை இந்த விண்ணப்பத்தில் குறிப்பிட வேண்டும். கால நீட்டிப்புக்கான விண்ணப்பம் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவு விதிமுறைகளின் 6 ஆம் மற்றும் 37 ஆம் நியதிகளை அனுசரிக்க வேண்டும். உங்களுடைய மேன்முறையீட்டுப்

பதிவுப் படிவத்தின் இரண்டு பிரதிகளை நீங்கள் உங்களுடைய விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும். உங்களுடைய விண்ணப்பத்திற்கு ஆதரவாக ஒரு உறுதி சான்றை அல்லது சட்டப்பூர்வமான உறுதிமொழியை வழங்க வேண்டும்.

## உங்களுடைய மேன்முறையீட்டு ஆவணங்களை நீங்கள் தாக்கல் செய்ய வேண்டிய இடம்

உங்களுக்கு தீர்மானம் பற்றிய அறிவித்தலை வழங்கிய அகதிகள் பாதுகாப்புப் பிரிவுப் பதிவக அலுவலகம் உள்ள அதே பிராந்தியத்தில் அமைந்திருக்கின்ற அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுப் பதிவக அலுவலகத்தில் உங்களுடைய ஆவணங்களை நீங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.

## ஆலோசனை

உங்களுடைய மேன்முறையீடு குறித்து உங்களுக்கு உதவுவதற்கு ஆலோசனையாளர் தேவையா என்பதை நீங்கள் தீர்மானித்துக்கொள்ளலாம். உங்களுடைய ஆலோசனையாளர் உங்களிடமிருந்து ஒரு கட்டணம் அல்லது வேறு ஏதாவது கொடுப்பனைப் பெற்றால், அத்தகைய ஆலோசனையாளர் ஒரு மாகாண சட்ட சங்கத்தின் (சட்டத்தரனிகளும் சட்டத் துணையாளர்களும்) நல்ல அந்தஸ்தில் இருக்கின்ற ஒருவராக அல்லது கனடா ஒழுங்குறுத்துகை சபையின் குடிவரவு ஆலோசனையாளர்களில் ஒருவராக இருத்தல் வேண்டும். உங்களுடைய ஆலோசனையாளர் உங்களிடமிருந்து ஒரு கட்டணத்தை பெறவில்லையென்றால், கட்டணமில்லாத அல்லது பிற கொடுப்பனை இல்லாத பிரதிநிதித்துவ அறிவித்தல் என்ற ஒரு படிவத்தை நீங்கள் பூர்த்தி செய்து அதனை கூடுமான விரைவில் அமைச்சருக்கும் அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கும் சமர்ப்பிக்க வேண்டும்.

**உங்களுக்கு ஒரு ஆலோனையாளர் இருந்தால், அந்த ஆலோசனையாளர் கால வரையறையைப் பூர்த்தி செய்கிறாரா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ளுவது உங்களுடைய பொறுப்பாகும்**.

## மொழி

நீங்கள் தெரிந்தெடுக்கும் கனடாவின் அதிகார்ப்பூர்வ மொழியில் (ஆங்கிலம் அல்லது பிரஞ்சு) மேன்முறையீட்டு அறிவிப்பை பெற்று அதனை நீங்கள் பூர்த்தி செய்யலாம். ஏதாவது ஒரு ஆவணம் ஏனைய மொழியில் இருந்தால், அதனை ஆங்கில அல்லது பிரஞ்சு மொழிபெயர்ப்புடனும் அந்த மொழிபெயர்ப்பு சரியானது என உறுதிப்படுத்தும் மொழிபெயர்ப்பாளரினால் கையொப்பமிடப்பட்ட ஒரு உறுதிமொழியுடனும் சமர்ப்பிக்க வேண்டும்.

ஆங்கில மொழிக்கும் பிரஞ்சு மொழிக்கும் இடையிலான தெரிவு குறித்து மேலதிக தகவல்களையும் உங்களுடைய மேன்முறையீட்டில் ஒரு வாய்மொழிமூல விசாரணை உத்தரவிடப்பட்டிருந்தால் ஒரு மொழிபெயர்ப்பாளரை கேட்டுப் பெறுவது குறித்தும் *மேன்முறையீட்டாளர் வழிகாட்டி* வழங்கும்.

## உங்களுடைய தகவல்கள் ஏனைய நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படலாம்

அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னிலையில் உங்களுடைய மேன்முறையீடு பற்றித் தீர்மானிக்கும் நோக்கத்திற்காக, *குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தின்* அதிகாரத்தின் கீழ், மேன்முறையீட்டு நடப்படிமுறையில் நீங்கள் வழங்கும் தனிப்பட்ட தகவல்கள் சேகரிக்கப்படும். *கனடா குடிவரவு மற்றும் அகதிகள் பாதுகாப்புச் சட்டத்தை* அமுலாக்கும் மற்றும் நிருவகிக்கும் நோக்கத்தின் நிமித்தம் உங்களுடைய தனிப்பட்ட தகவல்கள் கனடா எல்லைப்பகுதி சேவைகள் முகமை, கனடா குடியுரிமை மற்றும் குடிவரவுத் திணைக்களம், கனடா பாதுகாப்புத் துப்பறிதல் சேவைப் பிரிவு மற்றும் சட்ட அமுலாக்க முகமைகள் உள்ளிட்ட ஏனைய நிறுவனங்களுடன் பகிர்ந்துகொள்ளப்படலாம்.

**மேலதிகத் தகவல்களுக்கு, தயவுசெய்து *மேன்முறையீட்டாளர் வழிகாட்டி* மற்றும் கனடா குடிவரவு அகதிகள் வாரியத்தின்** http://www.irb-cisr.gc.ca/Eng/RefApp/Pages/RefAppKitTro.aspx **என்ற இணையத்தளத்தையும் பாருங்கள்.**

*அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவின் விதிமுறைகளை (அ.மே.வி.)* கனடாவின் நீதித் துறை வாரியத்தின் laws-lois.justice.gc.ca/eng/regulations/SOR-2012-257/index.html என்ற

***மேன்முறையீட்டாளர் பொதியின் ஒரு தாள் பிரதியை பெற்றுக்கொள்வதற்காக உங்களிடம் அச்சீட்டு வசதியில்லையெனில், தயவுசெய்து நீங்களாகவே அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு வந்து அதனைப் பெற்றுக்கொள்ளுங்கள் (தயவுசெய்து கீழுள்ள தொடர்புகளுக்கான விபரங்களைப் பார்க்கவும்)**

*அகதிகள் மேன்முறையீட்டுப் பிரிவுக்கு(* **RAD)** பதிவகங்களின் தொடர்பு முகவரி

*குடிவரவு அகதிகள் சபை*

(RAD) பதிவகம்

**கிழக்குப் பிராந்தியம்**

**(மொன்ட்றியல்)**

Complexe Guy-Favreau
200 René-Lévesque Boulevard
WEast Tower, Room 102
Montréal, Quebec H2Z 1X4
தொலைபேசி இலக்கம்: 514-283-7733
அல்லது 1-866-626-8719
தொலைநகல் இலக்கம்: 514-496-6629

*குடிவரவு அகதிகள் சபை*

(RAD) பதிவகம்

**மத்திய பிராந்தியம்**

**(டொராண்டோ)**

74 Victoria Street, Suite 400
Toronto, Ontario M5C 3C7
**தொலைபேசி இலக்கம்:** 416-954-1000
**அல்லது** 1-866-790-0581
தொலைநகல் **இலக்கம்:** 416-954-1511

*குடிவரவு அகதிகள் சபை*

(RAD) பதிவகம்

**மேற்குப் பிராந்தியம்**

**(வன்கூவர்)**

300 West Georgia Street, Suite
Vancouver, British Columbia
**தொலைபேசி இலக்கம்:**
604-666-5946
**அல்லது** 1-866-787-7472
**தொலைநகல் இலக்கம்:**
604-666-9870

*குடிவரவு அகதிகள் சபை* பதிவகம்